1995 நவம்பர் 7]

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி

திரு. வே. தம்புசாமி : தலைவரவர்களே, நான் ஒரு பிரச்சினையைப் பற்றிக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு இந்த ஒரு பிரச்சினையை எடுத்திருக்கிறேன். காமராஜர் மாவட்டப் பிரச்சினையை நாளை எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்கள் பிரச்சினையையும் நாளை எடுத்துக் கொள்வோம்.

4. விதி 110-ன் கீழ் சட்ட அமைச்சரின் அறிக்கை

மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு (Bench) அமைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை வதி 110-இன் கீழ் மதுரையில் உயர்நீதிமன்ற பெஞ்ச் ஒன்று அமைப்பதற்காக தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பான ஒரு அறிக்கையைப் பேரவைமுன் வைக்க மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பது தென் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தென் மாவட்டங்களிலுள்ள வழக்காடும் பொது மக்களின் நலன்கருதி மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்காக 1973-ஆம் ஆண்டிலேயே மைய அரசுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மைய அரசு மாநிலத் தலைநகர் தவிர பிற இடங்களில் உயர்நீதிமன்றக் கிளை அமைப்பது தொடர்பான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய, பணியிலிருந்து ஓய்வு பெற்று இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி ஜஸ்வந்து சிங் அவர்களுடைய தலைமையிலே குழு ஒன்றை நியமித்தது. இக்குழு 1984-ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு வருகை தந்தது. தமிழகத்தில் உள்ள கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஏழு தென்

[திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி] [1995 நவம்பர் 7

மாவட்டங்களில் உள்ள, வழக்காடும் பொது மக்களின் நலன் கருதி உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்று மதுரையில் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

இக்குழு உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கான தேவையான அடிப்படை வசதிகளான கட்டிடங்கள், மாண்புமிகு நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் நூலகம் போன்றவற்றை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியது. சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதிபதி இடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டுமென்றும், 5 முதல் 7 கூடுதல் நீதிபதி பதவிகள் தேவைப்படும் என்றும் இக்குழு குறிப்பிட்டது. மைய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களிடம் கருத்து கோரப்பட்டது. இப்பிரிவு குறித்து பல்வேறு நிலைகளிலும் நடவடிக்கைகள் தொடரப்பட்டன.

1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஏனென்றால் இந்த ஆண்டில்தான் சென்னை உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை மதுரையில் அமைப்பது குறித்த அனைத்துச் சாத்தியக்கூறுகளையும் ஆராய்வதற்காக உயர்நீதிமன்றத்திலே ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு நீதிபதிகளுக்கான குடியிருப்புக்கள், பணியாளர் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்புக்கள் மற்றும் நூலகம் போன்ற அடிப்படை வசதிகளும் செய்து கொடுப்பதைப்பற்றி ஆராய்ந்து தன்னுடைய அறிக்கையை 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளித்தது. இவ்வறிக்கையை ஏற்று, சென்னை உயர்நீதிமன்றம் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மதுரையில் உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டுமென்று தென் மாவட்ட மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்பது என்று தீர்மானித்தது. அமைக்கப்பட இருக்கும் இப்பிரிவு கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 11 மாவட்டங்களின் மீது அதிகார அமைப்பு கொண்டதாக இருக்கும். சென்னை உயர்நீதிமன்றத்திலுள்ள நீதிபதி இடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்ட பின் இப்பிரிவு துவக்கப்பட வேண்டுமென்றும் 5 முதல் 7 கூடுதல் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 11-45

நீதிமன்றத்திற்கான இடங்கள் மற்றும் கட்டிட வசதிகள், நீதிபதிகளுக்கான அறைகள், பணியாளர்கள் மற்றும் சட்ட அலுவலர்களுக்கான அலுவலக வசதிகள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் விருந்தினர் இல்லங்கள்

அமைத்துத்தரப்பட வேண்டும் என்பது இதர நிபந்தனைகளாகும். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள், மத்திய சட்ட அமைச்சர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மற்றும் மாநில ஆளுநர் ஆகியோர்களுக்குக் கடிதம் எழுதினர். மதுரையில் உயர்நீதிமன்ற பிரிவு ஒன்றை அமைப்பதற்கான தகுதியான இரண்டு மூன்று இடங்களைத் தெரிவிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மதுரையில் பிரதான இடத்தில் உயர்நீதிமன்ற பிரிவு ஒன்றை அமைக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் விரும்புகிறது. மாநில அரசு ஓரிரு இடங்களைத் தேர்வு செய்து, அந்த இடங்கள் பொருத்தமானதுதானா என்பது குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை தமிழக அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாக செய்துதர மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தென் மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் மதுரையில் சென்னை உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அமைப்பதற்காக எல்லா முயற்சிகளையும் விரைந்து செயல்படுத்த அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

5. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வே. கண்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. வே. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1995-96 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தெட்டு முதல் எழுபத்திரெண்டு வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.